2nd November 1966]

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஜில்லா முழுவதற்கும் கல்விக்கு பொறுப்பாக இருக்கக்கூடிய இந்த அதிகாரிகள் ஸ்தானங்கள் பல மாதங்கள் காலியாக இருப்பதற்கு நியாயம் இல்லை. தகுந்த அளவுக்கு டெப்யூடி இன்ஸ்பெக்டர்களுக்கு பிரமோஷன் கொடுப்பதற்கு தாமதம் ஏற்படுவதற்கு வேறு விசேஷ காரணம் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நீண்ட காலமாக இது குறித்து தாமதம் ஏற்பட்டு, இந்த ஸ்தானங்களைக் காலியாக வைத்துக் கொள்வதற்கு நியாயம் இல்லை என்று நானும் ஒத்துக்கொள்கிறேன். ஆனால், மேல் பதவிக்குப் பிரமோஷன் செய்வது பரிசீலனை செய்ய வேண்டிய விஷயம். பரிசீலனை செய்வதிலே சில சமயங்களில் தாமதம் ஏற்படுகிறது. இலாகாவினர் சொல்வதற்கும், இங்கே அரசாங்க இலாகாவிலே சொல்வதற்கும் வித்தியாசம் இருந்தால், தாமதம் ஏற்படுகிறது. ஆனால் கூடிய சீக்கிரம் இந்தக் காலி ஸ்தானங்கள் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன. இப்பொழுது குறிப்பிட்ட மூன்று ஸ்தானங்களும் பூர்த்தி செய்யப்பட்டு விட்டன.

திரு. சா. கணேசன் : இன்ஸ்பெக்டர்ஸ் போன்ற உத்தியோகஸ்தர்களை பிரமோஷன் செய்வதற்குத் தாமதம் அல்லது அவர்களுக்கு உரிய தகுதி பூரணமாகப் போதாது என்ற கருத்தில் அரசாங்கம் இருக்குமானால், பல்வேறு கலைத் துறைகளில், கல்லூரிகளில் அல்லது வேறு பள்ளிகளில் இருக்கிற தகுதி நிரம்பியவர்களை நேரடியாக இந்த ஸ்தானங்களுக்குப் பொறுக்கி எடுத்துக்கொள்ள அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா? அப்படி ஏதாவது ஏற்பாடு செய்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அப்படித்தான் அரசாங்கம் ஏற்பாடு செய்து நடத்திக்கொண்டு வருகிறது.

District Boards School Assistants

* 306 Q.—Sri M. S. SELVARAJAN : }
Sri GOMATHI SANKARA DIKSHITHAR : } Will the Hon. the Chief Minister be pleased to state the position of School Assistants and Deputy Inspectors with more than five years service under the former District Boards when the Schools were taken over by Government on 1st April 1966?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : There are no posts of Deputy Inspectors under the control of the former District Boards. The question of integrating the services of School Assistants and other allied matters is separately under the consideration of the Government.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சார், ஜில்லா போர்டிலே பணி புரிந்து இருக்கின்ற ஆசிரியர்களுடைய தகுதிக்குத் தக்க விதம், மேல் உத்தியோகம் கொடுக்கவில்லை என்கிற புகார் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா? வந்திருந்தால், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரம் என்ன என்று அறிவிக்கலாமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப் பரிசீலிக்க ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது ; கல்வித்துறை டெபுடி செக்ரடரி, நிதித்துறை டெபுடி செக்ரடரி, டைரக்டர் ஆஃப் செகண்டரி எஜுகேஷன் இவர்கள் சேர்ந்து அதையெல்லாம் பரிசிலித்து, அவர்களுடைய ரிப்போர்ட்டைக் கூட அனுப்பிவிட்டார்கள். இப்பொழுது அது டைரக்டர் ஆப் செகண்டரி எஜுகேஷன் அவர்களுடைய பரிசீலனை யில் இருக்கிறது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சார், அவர்களுடைய தகுதிக்குத் தக்க பிரமோஷன் கொடுக்கும்போது, ரிட்ராஸ்பெக்ட்டிவ் எபக்ட் கொடுத்து அமல் படுத்த ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கமிட்டி சிபாரிசு பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன். அவர்களுடைய ரிப்போர்ட்டு வந்த பிறகு, முடிவுகள் எடுக்கப்படும்.

Optional system in Secondary Schools

* 307 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the details of the proposal to introduce optional system in the Secondary Schools ; and

(*b*) when the same is expected to be given effect to?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Under the Revised pattern of School Education and Syllabus approved by the Government, pupils of Standards X and XI will choose one elective subject either under Section I or under Section II below :—

Section 1.—Algebra and Geometry, Physics, Chemistry, Biology, History, Geography, Languages (Sanskrit, Arabic or Persian).

Section II.—Secretarial course, Engineering, Agriculture, Home Science, Indian Music, Drawing and Painting.

The Schools will, however, be permitted to offer more than one elective according to the facilities available.

(*b*) The revised syllabus for Standards X and XI will be introduced in 1967–68 and 1968–69 respectively.

திரு. சா. கணேசன் : முதலாவது பிரிவிலும், இரண்டாவது பிரிவிலும் உள்ள பாட முறைகள் எல்லாப் பள்ளிகளிலும் அமலாக்கப்படுவது வரவேற்கத்தக்க ஒன்றுதான். ஆனால் வேண்டிய வாய்ப்புகள், சாதனங்கள் எல்லா பள்ளிக் கூடங்களிலும் இருக்கின்றனவா ? குறிப்பாக சர்க்கார் நிர்வாகத்திலுள்ள